**Starting time 11.11 A.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 254/2015**

Deposition of **P.W.3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 26.03.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : மல்லிகா | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** எனது வீட்டுக்காரரும் வாதியும் சகலைகள் என்றால், அண்ணன் தம்பிகள், அக்கா தங்கைகளை திருமணம் செய்துள்ளார்கள். எனது கணவர் ஆறுமுகத்திற்கு சொந்தமாக வீடு இருக்கிறது என்றால், இருக்கிறது எங்கிருக்கிறது என்றால், வாதியின் வீட்டிற்கு மேற்கில் உள்ளது. வாதி வீட்டிற்கும் ஆறுமுகம் வீட்டிற்கும் நடுவில் தென்வடல் சந்து செல்கிறது என்றால், ஆமாம். என்னுடைய வீடு தார்சு வீடு என்றால், ஆமாம். கலியன் தாவா சொத்தை விட்டு திருச்செங்கோட்டிற்கு சென்று 30 வருடங்களாகிறது என்றால், ஆமாம்.

2. பட்டா கொடுத்த போது இங்குதான் இருந்தார்கள். கலியன் பெயருக்கு பட்டா கொடுத்த இடத்தில் நான்தான் வீடு கட்டினேன் என்றால், இல்லை அரசாங்கம் கட்டி கொடுத்தது. நான் பராமரித்து வருகிறேன். கலியன் அந்த வீட்டில் இல்லை என்றால், ஆமாம். நான் தான் அந்த வீட்டில் இருக்கிறேன். கலியன் வீட்டிற்கு மேற்புறத்தில் யார் வீடு உள்ளது என்றால், செல்வராஜ் வீடு உள்ளது. கிழக்கில் வீதியும் உள்ளது. சாட்சி பின்னிட்டு செல்வராஜ் நேர் தெற்கில் கடைசியில் உள்ளது என்றும், வடக்கு பார்த்த வாசற்படி என்றும் கூறுகிறார்.

3. கலியன் வீட்டிற்கு நேர் தெற்கில் என்ன இருக்கிறது என்றால், செல்வராஜ் வீடு உள்ளது.

நான் கூறுவது தவறு என்றாலும், கலியன் வீட்டிற்கு நேர் தெற்கில் செல்வராஜ் வீடு இல்லை என்றாலும், சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டாவை பார்த்துள்ளேனா என்றால், இவ்வளவு நாட்களாக அதை நாங்கள் தான் வைத்திருந்தோம், பிரச்சனை வந்த பிறகு வாதியிடம் ஒப்படைத்துவிட்டேன்.

4. வாதி வீட்டின் கிழக்கு மேற்கு, தெற்கு வடக்கு நீள அகலம் தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. தாவா வரைபடத்திலேயே கலியன் வீட்டிற்கு தெற்கில் இருக்கும் இடத்தையும் சேர்த்து பொய்யாக காட்டியுள்ளோம் என்றால், இல்லை. எனது பிரமாண வாக்குமூல சங்கதிகளை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால், ஆமாம். பொய்யான சங்கதிகளை கூறி பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 11.21 A.M.

**ஒப்பம்/- என். திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**